## FIELD SURVEYOR, DRAFTSMAN AND SURVEYOR-CUM-ASSISTANT DRAUGHTSMAN IN TAMIL NADU SURVEY AND LAND RECORDS SUBORDINATE SERVICE & TAMIL NADU TOWN AND COUNTRY PLANNING – 6/11/2022

1. ____________ Foreign accounts called Muziri as the "First Emporium of India".
   **a. Natural History** b. Geography
   c. The Periplus of the Erythrean sea. d. Buddhist chronicles
   e. Answer not known
   முசிறியை 'இந்தியாவின் முதல் பேரங்காடி" என்று கூறும் வெளிநாட்டு நூல் __________ ஆகும்.
   a. இயற்கை வரலாறு b. புவியியல்
   c. எரித்திரியன் கடலின் பெரிப்ளஸ் d. பக்க பதிப்புகள்
   e. விடை தெரியவில்லை

2. Pick out the wrong pair:
   a. V.O. Chidambaram -September 5, 1872
   **b. Subramaniya bharathiyar -December 11, 1881**
   c. C.Rajaji - December 10, 1878
   d. K.Kamarajar - July 15, 1903
   e. Answer not known
   தவறான இணையைத் தேர்வு செய்க:
   a. வ.உ.சிதம்பரம் - செப்டம்பர் 5, 1872
   b. சுப்பிரமணிய பாரதியார் - டிசம்பர் 11, 1881
   c. சி.இராஜாஜி - டிசம்பர் 10, 1878
   d. காமராஜர் - ஜுலை 15, 1903
   e. விடை தெரியவில்லை

3. Assertion (A): Through the letter correspondence Velunachiyar asked 5000 infantry and 5000 cavalry strength to Hyder Ali.
   Reason (R): Velunachiyar conveyed her strong determination to fight the English.
   a. Both A and R are correct, but R is not the correct explanation of A.
   b. Both A and R are wrong.
   **c. Both A and R are correct and R is the correct explanation of A**
   d. A is wrong and R is correct
   e. Answer not known
   கூற்று A: வேலு நாச்சியார் ஹைதர் அலியிடம் 5000 காலாட்படைகளும், 5000 குதிரைப் படைகளும் அனுப்பும் படி கடிதம் எழுதினார்.
   காரணம் R: வேலு நாச்சியார் ஆங்கிலேயரோடு மோதுவதில் தீவிரமாக இருப்பதைத் தெளிவுபடுத்தினார்.
   a. கூற்று A மற்றும் காரணம் R இரண்டும் சரி எனினும் காரணம் R கூற்றை A சரியாக விளக்கவில்லை.
   b. கூற்று A மற்றும் காரணம் R ஆகிய இரண்டுமே தவறானவை

c. கூற்று A மற்றும் காரணம் R இரண்டும் சரி காரணம் R கூற்றை A சரியாகவே விளக்கவில்லை.
d. கூற்று A தவறானது. காரணம் R சரியானது
e. விடை தெரியவில்லை.

4. Name the Committee appointed by the British Government to enquire about the Jallianwala Bagh Massacre.
a. Dar Committee  **b. Hunter Committee**  c. Rai Committee
d. Simon Committee  e. Answer not known
ஜாலியன்வாலாபாக் படுகொலை பற்றி விசாரிக்க பிரிட்டிஷ் அரசாங்கம் நியமித்த குழுவின் பெயர்
a. தார் குழு  b. ஹன்டர் குழு  c. ராய் குழு
d. சைமன் குழு  e. விடை தெரியவில்லை.

5. Which two districts of Tamil Nadu are frequently affected by cyclonic storms?
a. Theni and Madurai  **b. Nagapattinam and Cuddalore**
c. Villupuram and Perambalur  d. Kancheepuram and Ramanathapuram
e. Answer not known
தமிழ் நாட்டின் எந்த இரண்டு மாவட்டங்கள் அடிக்கடி புயலினால் பாதிக்கப்படுகின்றன?
a. தேனி மற்றும் மதுரை  b. நாகப்பட்டினம் மற்றும் கடலூர்
c. விழுப்புரம் மற்றும் பெரம்பலூர்  d. காஞ்சிபுரம் மற்றும் இராமநாதபுரம்
e. விடை தெரியவில்லை.

6. Arrange the following Events in Chronological order
1. Navajawan Bharat Sabha
2. Bhagat Singh joined Hindustan socialist Republican Association
3. Bhagat Singh hanged in Lahore Jail
4. Bhagat Singh and B.K. Dutt thrown bomb in the Legislative Assembly Hall
a. 1,3,4,2  **b. 2,1,4,3**  c. 3,1,4,2
d. 4,3,2,1  e. Answer not known
கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை கால வரிசைப்படுத்துக.
1. நவஜவான் பாரத் சபா
2. இந்துஸ்தான் சோஷியலிச குடியரசு அமைப்பில் பகத்சிங் சேர்ந்தார்.
3. பகத்சிங் லாகூர் சிறையில் தூக்கிலிடப்பட்டார்.
4. பகத்சிங்கும் பி.கெ.தத்தும் மத்திய சட்டமன்றத்தின் மீது குண்டு வீசினார்கள்.
a. 1,3,4,2  **b. 2,1,4,3**  c. 3,1,4,2
d. 4,3,2,1  e. விடை தெரியவில்லை.

7. 'Al-Hilal' a weekly newspaper was started by
a. Mohammad Ali Jinnah  b. Rahmat Ali  c. Muhammad Iqbal
**d. Abdul Kalam Azad**  e. Answer not known
'அல் ஹிலால்' என்ற வார செய்தித்தாளை ஆரம்பித்தவர் _______________ ஆவார்.
a. முகமது அலி ஜின்னா  b. ரகமது அலி  c. முகமது இக்பால்
d. அபுல்கலாம் ஆசாத்  e. விடை தெரியவில்லை.

8. Match the following:
Rural welfare policy during plan periods

| | | |
|---|---|---|
| A. Bharat Nirman | 1. | X plan |
| B. Ensuring basic needs for rural poor | 2. | XI plan |
| C. Providing new wage earning revenues to rural poor | 3. | IX plan |
| D. Creating new infrastructure in rural areas | 4. | VIII plan |

A B C D

| | | | | |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| **b.** | **2** | **4** | **1** | **3** |
| c. | 4 | 1 | 2 | 3 |
| d. | 3 | 1 | 2 | 4 |

e. Answer not known.

பின்வருவனவற்றைப் பொருத்துக:

திட்ட காலத்தில் ஊரக நலக் கொள்கைகள்

A. பாரத நிர்மாண் — 1. X திட்டம்

B. ஊரக ஏழைகளின் அடிப்படை தேவைகளை உறுதி செய்தல் — 2. XI திட்டம்

C. ஊரக ஏழைகளுக்குப் புதிய ஊதியம் பெறும் வழிகளை ஆக்குதல் — 3. IX திட்டம்

D. ஊரகப் பகுதிகளில் புதிய உள்க் கட்டமைப்பு வகைகளை உருவாக்குதல் — 4. VIII திட்டம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 2 | 4 | 1 | 3 |
| c. | 4 | 1 | 2 | 3 |
| d. | 3 | 1 | 2 | 4 |

e. விடை தெரியவில்லை

9. The taxes on properties are collected by

a. Central Government
b. State Government
c. Central and State Government
**d. Local governments**
e. Answer not known

சொத்துக்களுக்கான வரி இந்தியாவில் யாரால் வசூலிக்கப்படுகிறது?

a. மைய அரசு
b. மாநில அரசு
c. மைய மற்றும் மாநில அரசு
d. உள்ளாட்சி அரசு
e. விடை தெரியவில்லை.

10. The tax revenue from lotteries organized by the Union Government or the State Government goes to

**a. Central Government**
b. State Government
c. Both State and Central Government
d. None of the above
e. Answer not known

மத்திய அரசால் அல்லது மாநில அரசால் அமைக்கப்பட்ட லாட்டரி சீட்டுகள் மூலம் கிடைக்கும் வரி வருவாய் யாருக்குச் செல்லும்?

a. ஒன்றிய அரசுக்கு
b. மாநில அரசுக்கு
c. மத்திய மற்றும் மாநில அரசுக்கு
d. மேற்கண்ட எதுவும் இல்லை
e. விடை தெரியவில்லை

11. Which of the following are the economic problems of poverty?

I. Increasing unemployment
II. Technological Development
III.Capital deficiency
IV. Inadequate economic Development

a. I, II and III
b. II, III and IV
**c. I, III and IV**
d. I,II and IV
e. Answer not known

பின்வருபவை வறுமையின் பொருளாதார பிரச்சனையாகும்.

I. அதிகரிக்கும் வேலையின்மை
II. தொழில்நுட்ப வளர்ச்சி
III. மூலதனப் பற்றாக்குறை
IV. போதிய பொருளாதார வளர்ச்சியின்மை

a. I, II மற்றும் III
b. II, III மற்றும் IV
**c. I,III மற்றும் IV**
d. I,II மற்றும் IV
e. விடை தெரியவில்லை

12. The country which hosts the BRICS meet for the year 2022 is

a. Brazil
b. Russia
c. India
**d. China**
e. Answer not known

2022 ஆம் ஆண்டிற்கான BRICS மாநாட்டை நடத்தும் நாடு __________ ஆகும்.

a. பிரேசில் b. இரஷ்யா c. இந்தியா
d. சீனா e. விடை தெரியவில்லை.

13. Identify the personality:
He played a pivotal role in spreading rational ideas and scientific perception into politics of Tamil nadu. He worked for the welfare of farmers, workers and spread socialist thinking into politics. He was appointed as a member of the Indian National Congress.

a. J.C.Kumarappa b. E.V.R. Periyar **c. Singaravelar**
d. Maraimalai Adigal e. Answer not known

ஆளுமையை (நபரை) அடையாளம் காண்க:
இவர் தமிழக அரசியல் இயக்கத்தில் பகுத்தறிவு கருத்துக்கள் மற்றும் அறிவியல் பார்வைகளை ஏறடபடுத்தியவர்: விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் நலனுக்காக பாடுபட்டவர்: இந்திய அரசியலில் சமதர்ம கருத்துக்களைப் பரப்பியவர்: இந்திய தேசிய காங்கிரஸின் உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டவர்.

a. ஜெ.சி. குமரப்பா b. ஈ.வே.ரா. c. சிங்காரவேலர்
d. மறைமலை அடிகளார் e. விடை தெரியவில்லை

14. Assertion (A): Article 312 of the Indian Constitution provides for All India Services.
Reason (R): The states wanted to have uniformity in Bureaucracy.

**a. A is true but R is false**
b. Both A and R are true and R is the correct explanation of A
c. A is false R is true
d. Both A and R are true, but R is not the correct explanation of A
e. Answer not known

கூற்று (A): இந்திய அரசமைப்பு விதி 312 அகில இந்தியப் பணிகள் தொடர்பானதாகும்.
காரணம் (R): ஒரே சீரான தன்மையுடைய அதிகாரவர்க்கம் இருக்க வேண்டும் என மாநிலங்கள் விரும்பின.

a. கூற்று A உண்மையாகும். காரணம் R தவறாகும்.
b. கூற்று A மற்றும் காரணம் R ஆகிய இரண்டும் சரியாகும். மேலும் காரணம் R என்பது கூற்று A விற்கான சரியான விளக்கமாகும்.
c. கூற்று A தவறு. காரணம் R சரியாகும்.
d. கூற்று A மற்றும் காரணம் R ஆகிய இரண்டும் சரியாகும். மேலும் காரணம் R என்பது கூற்று A விற்கான சரியான விளக்கம் அல்ல.
e. விடை தெரியவில்லை.

15. Jawless vertebrates are

a. Cephalochordates b. Urochordates **c. Cyclostomes**
d. Amphibians e. Answer not known

தாடையற்ற முதுகெலும்பிகள் என்பவை யாவை?

a. தலை முதுகு பிராணிகள் b. வால் முதுகு பிராணிகள்
c. வட்டவாயுடைய உயிரிகள் d. இருவாழ் உயிரினங்கள்
e. விடை தெரியவில்லை

16. Choose the following pair which lack nucleus in the human blood.

a. Neutrophils and Eosinophils b. Basophils and Lymphocytes
c. Monocytes and Eosinophils **d. Matured erythrocytes and Thrombocytes**
e. Answer not known

மனித இரத்தத்தில் உட்கரு இல்லாத இணைகளைத் தேர்ந்தெடுக்கவும்.

a. நியூட்ரோ.ஃபில்கள் மற்றும் ஈசினோ.ஃபில்கள்
b. பேசோ.ஃபில்கள் மற்றும் லிம்போசைட்கள்
c. மோனோசைட்கள் மற்றும் ஈசினோ.ஃபில்கள்
d. முதிர்ச்சி அடைந்த எரித்ரோசைட்டுகள் மற்றும் திராம்போசைட்டுகள்
e. விடை தெரியவில்லை.

17. The left over slurry in biogas production is a good manure rich in
a. Carbon and hydrogen
**b. Nitrogen and phosphorus**
c. Iodine and Antimony
d. Sodium and Calcium
e. Answer not known
உயிரி வாயு உற்பத்தியில் படியும் கழிவுகளில் ________ அளவு மிகுந்திருப்பதால் சிறந்த உரமாகும்.
a. கார்பன் மற்றும் ஹைட்ரஜன்
b. நைட்ரஜன் மற்றும் பாஸ்பரஸ்
c. அயோடின் மற்றும் ஆன்டிமனி
d. சோடியம் மற்றும் கால்சியம்
e. விடை தெரியவில்லை.

18. Calculate the concentration of $H_3O^+$ ion in a mixture of 0.08 M $CH_3COOH$ and 0.06 M $CH_3COONa$ at 298 K ( Ka for acetic acid = $1.84 \times 10^{-5}$)
**a. $2.4533 \times 10^{-5}$ *mol $l^{-1}$***
b. $2.7613 \times 10^{-5}$ *mol $l^{-1}$*
c. $3.4533 \times 10^{-5}$ *$mol^2$ $l^{-2}$*
d. $2.7713 \times 10^{-5}$ *mol $l^{-1}$*
e. Answer not known
298K வெப்பநிலையில், 0.08M $CH_3COOH$ மற்றும் 0.06M $CH_3COONa$ கொண்ட கலவையில் உள்ள $H_3O^+$ அயனியின் செறிவினைக் கணக்கிடுக.
( அசிடிக் அமிலத்தின் Ka= $1.84 \times 10^{-5}$ )
a. $2.4533 \times 10^{-5}$ *mol $l^{-1}$*
b. $2.7613 \times 10^{-5}$ *mol $l^{-1}$*
c. $3.4533 \times 10^{-5}$ *$mol^2$ $l^{-2}$*
d. $2.7713 \times 10^{-5}$ *mol $l^{-1}$*
e. விடை தெரியவில்லை

19. If 75% of a number is added to 75, then the result is the number itself. Find the number.
a. 50 b. 60 **c. 300** d. 400 e. Answer not known
ஓர் எண்ணின் 75% உடன் 75 ஐ கூட்டினால் முடிவு அதே எண். அந்த எண்ணைக் கண்டுபிடி.
a. 50 b. 60 c. 300 d. 400 e. விடை தெரியவில்லை

20. What is 25 % of 30 % of 400?
a. 25 **b. 30** c. 120 d. 150 e. Answer not known
400 ன் 30 % மதிப்பின் 25 % என்ன?
a. 25 b. 30 c. 120 d. 150 e. விடை தெரியவில்லை

21. Find the H.C.F. of $21x^2y$, $35xy^2$ from the following.
a. 7 x b. 7y c. $7x^2y$ **d. 7xy** e. Answer not known
கீழே உள்ளவைகளில் $21x^2y$, $35xy^2$ ஆகியவற்றின் மீ.பொ.வ.காண்க.
a. 7 x b. 7y c. $7x^2y$ d. 7xy e. விடை தெரியவில்லை

22. What is the volume of a cube whose diagonal measures $4\sqrt{3}$ cm?
a. 8 $cm^3$ b. 16 $cm^3$ c. 27 $cm^3$ **d. 64 $cm^3$** e. Answer not known
$4\sqrt{3}$ செ.மீ ஐ மூலைவிட்டமாகக் கொண்ட கனசதுரத்தின் கனஅளவு என்ன?
a. 8 $cm^3$ b. 16 $cm^3$ c. 27 $cm^3$ d. 64 $cm^3$ e. விடை தெரியவில்லை

23. In tossing a fair coin twice, find the probability of getting atleast one head.

a. $\frac{1}{4}$ b. $\frac{1}{2}$ **c. $\frac{3}{4}$** d. 1 e. Answer not known

ஒரு சீரான நாணயம் இரண்டு முறை சுண்டப்படுகிறது. குறைந்தது ஒரு தலை கிடைக்க நிகழ்தகவினைக் காண்க.

a. $\frac{1}{4}$ b. $\frac{1}{2}$ c. $\frac{3}{4}$ d. 1 e. விடை தெரியவில்லை

24. The least number which is exactly divisible by 32, 36, 45, 60 and 80 is

a. 1444 **b. 1440** c. 1404 d. 1430 e. Answer not known

32, 36, 45, 60 மற்றும் 80 ஆகிய எண்களால், மீதியின்றி வகுபடும் மிகச் சிறிய எண்

a. 1444 b. 1440 c. 1404 d. 1430 e. விடை தெரியவில்லை

25. 8 men can complete a work in 16 days. 4 days later, 8 more men joined them. Then the number of days required to complete the remaining work is

a. 4 **b. 6** c. 8 d. 10 e. Answer not known

8 நபர்கள் ஒரு வேலையை 16 நாட்களில் செய்து முடிப்பர். 4 நாட்கள் கழித்து மேலும் 8 நபர்கள் வந்து சேர்கிறார்கள் எனில், அவ்வேலையைச் செய்ய எடுத்துக் கொள்ளும் நாட்கள்

a. 4 **b. 6** c. 8 d. 10 e. விடை தெரியவில்லை

26. A car travels 360 km in 4 hrs. Find the distance it covers in 6 hrs 30 minutes at the same speed.

a. 400 km **b. 585 km** c. 600 km d. 636 km e. Answer not known

ஒரு மகிழுந்து 360 கி.மீ தூரத்தை 4 மணி நேரத்தில் கடக்கின்றது. அதே வேகத்தில் மகிழுந்து செல்லும் பொழுது 6 மணி 30 நிமிடங்களில் எவ்வளவு தூரத்தைக் கடக்கும் எனக் காண்க.

a. 400 கி.மீ b. 585 கி.மீ c. 600 கி.மீ d. 636 கி.மீ e. விடை தெரியவில்லை

27. 6 pipes are required to fill a tank in 1 hour 20 minutes. How long will it take if 5 pipes of the same type are used?

**a. 96 minutes** b. 98 minutes c. 94 minutes
d. 92 minutes e. Answer not known

ஒரு நீர்த்தொட்டியை 6 குழாய்களைக் கொண்டு நிரப்பினால் 1 மணி 20 நிமிடத்தில் அத்தொட்டி நிரம்பும் எனில் 5 குழாய்களைக் கொண்டு நிரப்பினால் எவ்வளவு நேரத்தில் அத்தொட்டி நிரம்பும்?

a. 96 நிமிடங்கள் b. 98 நிமிடங்கள் c. 94 நிமிடங்கள்
d. 92 நிமிடங்கள் e. விடை தெரியவில்லை

28. 'A' can do a piece of work in 10 days and 'B' can do it in 15 days. How much does each of them get if they finish the work and earn Rs. 1, 500?

a. Rs. 800, Rs. 700 **b. Rs. 900, Rs. 600**
c. Rs. 850, Rs. 650 d. Rs. 950, Rs. 550
e. Answer not known

'A' ஒரு வேலையை 10 நாட்களிலும் 'B' அதே வேலையை 15 நாட்களிலும் முடிப்பர். இருவரும் சேர்ந்து அவ்வேலையை செய்து Rs. 1,500 ஐ ஈட்டினர். எனில் அத்தொகையை எவ்வாறு பிரித்து கொள்வர்?

a. ரூ. 800, ரூ. 700 b. ரூ. 900, ரூ. 600 c. ரூ. 850, ரூ. 650
d. ரூ. 950, ரூ. 550 e. விடை தெரியவில்லை

29. On dividing 15968 by a certain number, the quotient is 89 and the remainder is 37. Find the divisor

a. 169 **b. 179** c. 181 d. 189 e. Answer not known

15968 ஐ எந்த எண்ணால் வகுக்கும் போது ஈவு 89 மற்றும் மீதி 37 கிடைக்கும்?

a. 169 b. 179 c. 181 d. 189 e. விடை தெரியவில்லை

30. If certain sum of amount becomes doubled in 10 years. Then its rate of interest is
a. 5% **b. 10%** c. 15% d. 20% e. Answer not known
ஒரு குறிப்பிடத் தொகையானது 10 ஆண்டுகளில் இரட்டிப்பு ஆகிறது எனில் அதன் வட்டி வீதம்
a. 5% b. 10% c. 15% d. 20% e. விடை தெரியவில்லை

31. How much time will it take for an amount of Rs. 450 to yield Rs. 81 as interest at 4.5% per annum of simple interest?
a. 3.5 years **b. 4 years** c. 4.5 years
d. 5 years e. Answer not known
ரூ.450 க்கு ஆண்டிற்கு 4.5% வட்டி வீதத்தில், தனிவட்டி முறையில், எத்தனை ஆண்டுகளில் ரூ.81 வட்டியாக கிடைக்கும்.?
a. 3.5 ஆண்டுகள் b. 4 ஆண்டுகள் c. 4.5 ஆண்டுகள்
d. 5 ஆண்டுகள் e. விடை தெரியவில்லை

32. Reason and Assertion type:
Assertion (A): We the people of India, having solemnly resolved to constitute India into a sovereign, socialist secular, Democratic, Republic.
Reason (R): The preamble reveals the source of authority of the constitution and nature of Indian State.
a. A is true but R is false
b. Both A and R are true and R is the correct explanation of A
c. A is false, R is true
d. Both A and R are true. But R is not the correct explanation of A
e. Answer not known
கூற்று (A): இந்திய மக்களாகிய நாங்கள் இந்தியாவை ஒரு இறையாண்மை கொண்ட சமதர்ம மதசார்பற்ற, ஜனநாயக, குடியரசாக அமைவதற்கு, உறுதியுடன் தீர்மானித்துள்ளோம்.
காரணம் (R): முகவுரை இந்திய அரசியல் சாசனத்தின் அதிகார மூலதனம் மற்றும் இந்திய நாட்டின் தன்மையை வெளிப்படுத்துகிறது.
a. A சரி ஆனால் R தவறு
b. A மற்றும் R ஆகிய இரண்டும் சரி R என்பது A யின் சரியான விளக்கம்
c. A தவறு ஆனால் R சரி
d. A மற்றும் R ஆகிய இரண்டும் சரியானது ஆனால் R க்கு சரியான விளக்கம் A இல்லை.
e. விடை தெரியவில்லை.

33. Assertion (A): Directive Principles of State Policy ( DPSP) are described as 'novel feature' of Indian Constitution, according to B.R. Ambedkar
Reason (R): DPSP acts as a guideline for the state.
a. A is true but R is false.
**b. Both A and R are true: and R is the correct explanation of A**
c. A is false. R is true
d. Both A and R are true but R is not the correct explanation of A
e. Answer not known
கூற்று (A) : அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள் இந்திய 'அரசியலமைப்பின் புதுமையான சிறப்பம்சம்' என B.R. அம்பேத்கரால் விவரிக்கப்படுகிறது.
காரணம்(R): அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள் நாட்டிற்கான வழிகாட்டியாக செயல்படுகிறது.
a. A சரி ஆனால் R தவறு
b. A மற்றும் R ஆகிய இரண்டும் சரி R என்பது A யின் சரியான விளக்கம்
c. A தவறு ஆனால் R சரி
d. A மற்றும் R ஆகிய இரண்டும் சரியானது ஆனால் R க்கு சரியான விளக்கம் A இல்லை.

e. விடை தெரியவில்லை.

34. Which High Court is the biggest High Court in India?

a. Calcutta b. Chennai **c. Allahabad**
d. Delhi e. Answer not known

இந்தியாவின் மிகப் பெரிய உயர் நீதிமன்றம் எது?

a. கல்கத்தா உயர் நீதி மன்றம் b. சென்னை உயர் நீதிமன்றம்
c. அலகாபாத் உயர் நீதி மன்றம் d. டெல்லி உயர் நீதிமன்றம்
e. விடை தெரியவில்லை.

35. Match the following:

| Country | Name of the Parliament |
|---|---|
| A. USA | 1. Diet |
| B. Japan | 2. Parliament |
| C. Britain | 3. Folketing |
| D. Denmark | 4. Congress |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 3 | 4 |
| **b.** | **4** | **1** | **2** | **3** |
| c. | 2 | 3 | 4 | 1 |
| d. | 4 | 3 | 2 | 1 |

e. Answer not known

பொருத்துக:

| நாடுகள் | நாடாளுமன்றத்தின் பெயர் |
|---|---|
| A. அமெரிக்க ஐக்கிய நாடுகள் | 1. டயட் |
| B. ஜப்பான் | 2. பாராளுமன்றம் |
| C. பிரிட்டன் | 3. போல்கட்டிங் |
| D. டென்மார்க் | 4. காங்கிரஸ் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 3 | 4 |
| b. | 4 | 1 | 2 | 3 |
| c. | 2 | 3 | 4 | 1 |
| d. | 4 | 3 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை.

36. Match correctly the excavated things with the corresponding places:

| | |
|---|---|
| A. Copper | 1. Khetri |
| B. Gold | 2. Kolar |
| C. Lapis Lazuli | 3. Badakhshan |
| D. Cloth | 4. Umma |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 1 | 2 |
| **b.** | **1** | **2** | **3** | **4** |
| c. | 4 | 2 | 1 | 3 |
| d. | 1 | 4 | 3 | 2 |

e. Answer not known

அகழ்வாராய்ச்சி செய்யப்பட்ட பொருட்களைத தொடர்புடைய இடங்களுடன் சரியாகப் பொருத்தவும்.

| | |
|---|---|
| A. தாமிரம் | 1. கெத்ரி |
| B. தங்கம் | 2. கோலார் |

C. மணிக்கல் 3. பூாதஷன்

d. துணி 4. உம்மா

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 1 | 2 |
| b. | 1 | 2 | 3 | 4 |
| c. | 4 | 2 | 1 | 3 |
| d. | 1 | 4 | 3 | 2 |
| e. | விடை தெரியவில்லை | | | |

37. Which reference says that the bankers work was done mostly by the Sarrofs, Sahukars and Mahajan's during the Mughal period?

a. Tazkirai – ul- waqiat of Jauhar

b. Razik Priya of kesh Das

c. Ain – i – Akbari of Abul fazl

**d. Khulasat – ul – Twarikh of Sujan Rai**

e. Answer not known

முகலாயர் காலத்தில் வங்கிப் பணிகள் பெரும்பாலும் ஷ்ரா∴ப்கள், சாஹுகர்கள் மற்றும் மகாஜன்களால் செய்யப்பட்டன என்று எந்தக் குறிப்புக் கூறுகிறது?

a. தஸ்கிராய்-உல்-வாகியாத் ஜௌஹரின்

b. கேசவ் தாஸின் ரசிக் பிரியா

c. அபுல் ∴பஸ்லின் ஐன்-ஐ–அக்பரி

d. சுஜான் ராயின் குலாசத்-உல்-த்வரிக்

e. விடை தெரியவில்லை.

38. The greatest king of the Rashtrakuta dynasty was

**a. Amongavarsha I** b. Krishna II c. Indra III

d. Govinda II e. Answer not known

ராஷ்டிரகூட அரசர்களில் தலைசிறந்தவர்

a. முதலாம் அமோகவர்ஷா b. இரண்டாம் கிருஷ்ணர் c. மூன்றாம் இந்திரர்

d. இரண்டாம் கோவிந்தர் e. விடை தெரியவில்லை

39. According to census 2011, the percentage of tribals in total population of India is

a. 6.3% b.7.4 % c. 8.2% **d. 8.6%** e. Answer not known

2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் பழங்குடி மக்கள் மட்டும் _____________ சதவீதம் உள்ளனர்.

a. 6.3% b.7.4 % c. 8.2% d. 8.6% e. விடை தெரியவில்லை

40. Consider the following statement and tick the correct answer;

i. 'Secularism' is the part of Indian Constitution

ii. One religious group dominate another

iii. The State permits the practice of any religion

iv. The State remains neutral in religious matters.

a. i and ii only b. ii and iii only c. iv only

**d. i, iii and iv only** e. Answer not known

சரியான கூற்றை தேர்வு செய்க:

i) சமயச் சார்பின்மை என்பது இந்திய அரசியலமைப்பின் ஒரு அங்கமாகும்.

ii. ஒரு சமயம் சார்ந்த குழு மற்றொரு குழுவின் மீது ஆதிக்கம் செலுத்துதல்

iii. எந்த சமயத்தையும் பின்பற்ற அரசு அனுமதியளித்தல்

iv. சமய விவகாரங்களில் அரசு நடுநிலைமை கொண்டிருத்தல்

a. i, ii மட்டும் b. ii, iii மட்டும் c. iv மட்டும்

d. i, ii மற்றும் iv மட்டும் e. விடை தெரியவில்லை

41. Match List I with List II correctly and select your answer using the codes given below.

| List I | List II |
|---|---|
| Pass | Connecting two places |
| A. Niti pass | 1. Kashmir with Kargil |
| B. Pensila Pass | 2. Uttarkhand with Tibet |
| C. Burzail Pass | 3. Ladakh with China |
| D. Rohtang Pass | 4. Lahul with Spiti |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **a.** | **2** | **1** | **3** | **4** |
| b. | 2 | 3 | 4 | 1 |
| c. | 2 | 3 | 1 | 4 |
| d. | 2 | 1 | 4 | 3 |

e. Answer not known

பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு விடையைத் தேர்ந்தெடு.

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| கணவாய் | இரண்டு இடங்களை இணைக்கிறது. |
| A. நிட்டி கணவாய் | 1. கார்கிலுடன் காஷ்மீர் |
| B. பென்சிலா கணவாய் | 2. திபெத்துடன் உத்தரகண்ட் |
| C. புர்சைல் கணவாய் | 3. லடாக்குடன் சீனா |
| D. ரோஹ்தாங் கணவாய் | 4. ஸ்பிட்டியுடன் லாஹுல் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **a.** | **2** | **1** | **3** | **4** |
| b. | 2 | 3 | 4 | 1 |
| c. | 2 | 3 | 1 | 4 |
| d. | 2 | 1 | 4 | 3 |

e. விடை தெரியவில்லை.

42. In which year, Quick Mail Service is introduced in India?

a. 1955 b. 1965 **c.1975**

d. 1985 e. Answer not known

இந்தியாவில் விரைவு அஞ்சல் சேவை எந்த ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது?

a. 1955 b. 1965 c.1975

d. 1985 e. விடை தெரியவில்லை

43. Among the Union territories, which is the highest and lowest density of population in India?

a. New Delhi, Puducherry

**b. New Delhi, Andaman and Nicobar Islands**

c. New Delhi, Goa

d. New Delhi, Yanam

e. Answer not known

இந்தியாவில் அதிக மற்றும் குறைந்த மக்களடர்த்தி கொண்ட யூனியன் பிரதேசங்கள் யாவை?

a. புதுடெல்லி, புதுச்சேரி b. புதுடெல்லி, அந்தமான நிக்கோபார் தீவுகள்

c. புதுடெல்லி, கோவா d. புதுடெல்லி, ஏனாம்

e. விடை தெரியவில்லை.

44. Which of the following is incorrectly paired?

1. SBSE – State Board of School Examinations
2. BHSE- Board of Highly Secured Examination
3. TNBSE- Tamil Nadu Board of Schooling Education
4. TNBHSE – Tamil Nadu Board of Higher Secondary Education

a. 1 and 2 are incorrect  **b. 2 and 3 are incorrect**
c. 3 and 4 are incorrect  d. 1 and 3 are incorrect
e. Answer not known

பின்வருவனவற்றில் எது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது?
1. SBSE – மாநில பள்ளிக் கல்வி வாரியம்
2. BHSE- உயர் மதிப்பெண் தேர்வு வாரியம்
3. TNBSE-தமிழ்நாடு பள்ளிக் கல்வி வாரியம்
4. TNBHSE –தமிழநாடு மேல்நிலைக் கல்வி வாரியம்

a. 1 மற்றும் 2 சரியானது அல்ல.  b. 2 மற்றும் 3 சரியானது அல்ல
c. 3 மற்றும் 4 சரியானது அல்ல  d. 1 மற்றும் 3 சரியானது அல்ல
e. விடை தெரியவில்லை

45. Wildlife Protection Act was enacted in the year

a. 1974  b. 1980  **c. 1972**  d. 2002  e. Answer not known

வன விலங்குகள் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

a. 1974  b. 1980  c. 1972  d. 2002  e. விடை தெரியவில்லை

46. The Government of Tamil Nadu has instituted an award by name _________ to a person outstanding service to promote communal Harmony.

a. Thiruvalluvar Award  **b. "Kottai Ameer Communal Harmony Award"**
c. Perarignar Anna Award  d. Pavendar Bharathidasan Award
e. Answer not known

மத நல்லிணக்கத்தை மேம்படுத்தும் வகையில் சிறந்த சேவையாற்றிய ஒருவருக்கு தமிழ்நாடு அரசு வழங்கும் விருது_______________

a. திருவள்ளுவர் விருது  b. கோட்டை அமீர் மத நல்லிண விருது
c. பேரறிஞர் அண்ணா விருது  d. பாவேந்தர் பாரதிதாசன் விருது
e. விடை தெரியவில்லை

47. Who are citizens, choose the wrong statement.
i. Citizens enjoy full civil rights
ii. Citizens are members of the political community
iii. Citizens do not enjoy political rights

a. i and ii  b. i alone  c. ii alone
**d. iii alone**  e. Answer not known

பின்வரும் கூற்றுள் குடிமக்கள் யார் என்பதில் தவறான கூற்றைக் காட்டுக.
i) குடிமக்கள் முழு சிவில் உரிமைகளை அனுபவிக்கிறார்கள்
ii) அரசியல் சமூகத்தின் உறுப்பினர்கள்
iii) குடிமக்கள் அரசியல் உரிமைகளை அனுபவிப்பதில்லை

a. i மற்றும் ii  b. i மட்டும்  c. ii மட்டும்
d. iii மட்டும்  e. விடை தெரியவில்லை

48. What is much tastier than the nectar from heaven in a family?

a. Touch of Children  **b. Food messed up by the hand's of one's children**
c. Music of the flute  d. Loving words of the beloved
e. Answer not known

அமிழ்தத்தை விட இனிமையானது என்று வள்ளுவர் எதனைச் சுட்டுகின்றார்?

a. மக்கள் மெய் தீண்டல்  b. தம் மக்கள் சிறு கை அளாவிய கூழ்

c. புல்லாங்குழலின் இனிமை d. காதலி இன் ‘சொல்’
e. விடை தெரியவில்லை

49. “Navil thorum Noolnayam: polum payilthorum Thotarbu “ whose association gives great pleasure?
a. Association with innocence ( Pethayar thodarbu)
b. Association with women (Arivaiyar Thodarbu)
**c. Association with the genteel ( Panbudaiyaalar Thodarbu)**
d. Association with the learned ( Arivudaiyaar Thodarbu)
e. Answer not known
‘நவில் தொறும் நூல் நயம் போலும் பயில்தொறும் தொடர்பு” யாருடைய தொடர்பு இன்பம் தரும்?
a. பேதையார் தொடர்பு b. அரிவையர் தொடர்பு
c. பண்புடையாளர் தொடர்பு d. அறிவுடையவர் தொடர்பு
e. விடை தெரியவில்லை.

50. The National Human Right Commission was established in the year
a. 1990 b. 1978 c. 1979
d. 1993 e. Answer not known
தேசிய மனித உரிமைகள் ஆணையம் நிறுவப்பட்ட ஆண்டு
a. 1990 b. 1978 c. 1979
d. 1993 e. விடை தெரியவில்லை.

51. Choose the correct pair:
**a. Glass beads - Porunthal**
b. Shell wastes of Bangle - Keezhadi
c. Furnace - Kodumanal
d. Canoe - Auroville, Puducherry
e. Answer not known
சரியான இணையைத் தேர்வு செய்க:
a. கண்ணாடி மணிகள் - பொருந்தல்
b. உடைந்த சங்கு வளையல் - கீழடி
c. உருக்கு உலை - கொடுமணல்
d. ஒரே மரத்தாலான படகின் பகுதி - புதுச்சேரியின் ஆரோவில்
e. விடை தெரியவில்லை

52. Choose the correct answer:
(i) Velu Nachiyar was a Queen of Sivagangai
(ii) Muthu Vaduganathar was killed in Kalaiyar Koil Battle, was the husband of Velu Nachiyar.
(iii) Kuyili a commander of Velu Nachiyar was the first suicide attacker.
(iv) With the help of Marudhu Brothers again Velu Nachiyar was crowned as Queen.
a. i, ii and iv are correct b. i, iii and iv are correct c. ii and iii are correct
**d. All are correct** e. Answer not known
சரியான விடையைத் தெரிவு செய்க:
(i) சிவகங்கையின் ‘இராணி’ வேலு நாச்சியார் ஆவார்
(ii) காளையர் கோவில் போரில் கொல்லப்பட்ட முத்து வடுகநாதர் இராணி வேலு நாச்சியாரின் கணவராவார்.
(iii) வேலு நாச்சியாரின் நம்பிக்கைக்குரிய படைத் தளபதி குயிலி இவர் முதல் தறகொலைப் படை வீரர் ஆவார்.

(iv) மருது சகோதரர்களின் உதவியுடன் வேலு நாச்சியார் மீண்டும் இராணியாக முடி சூட்டிக் கொண்டார்.

a. i, ii மற்றும் iv சரி b. i, iii மற்றும் iv சரி c. ii, மற்றும் iii சரி
d. அனைத்தும் சரி e. விடை தெரியவில்லை

53. _________ showed his compassion and mercy on all living beings including plants.
**a. Ramalinga Adigal** b. Iyothee Thasar c. Baba Ram Singh
d. Guru Nanak e. Answer not known

__________ தன்னுடைய அன்பையும் இரக்கத்தையும் செடி கொடிகள் உட்பட அனைத்து உயிரினங்களிடத்திலும் காட்டியவர்.'

a. இராமலிங்க அடிகள் b. அயோத்திதாசர் c. பாபா ராம் சிங்
d. குருநானக் e. விடை தெரியவில்லை

54. Choose the correct statement:
I. Priyar EV Ramasamy was the founder of the Self-Respect Movement.
II. People hailed him as 'Vaikom Veerar" (Hero of VaiKom).
III. He frequently wrote columns in the magazine under the 'pen name' "Chitra Puttiran".
IV. He also supported B.R. Ambedkar's demand for separate electorates to scheduled castes.

a. I and IV are correct b. II and III are correct
**c. I, II and IV are correct** d. II is correct e. Answer not known

சரியான கூற்றைத் தேர்வு செய்க.
I. பெரியார் ஈ.வெ. இராமசாமி சுய மரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார்
II. மக்கள் அவரை 'வைக்கம் வீரர்' என பாராட்டினர்
III. பெரியார் 'சித்திர புத்திரன்' எனும் புனை பெயரில் கட்டுரைகளை எழுதினார்
IV. B.R. அம்பேத்கார் அவர்களின் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான தனித்தேர்தல் தொகுதிக் கோரிக்கையை பெரியாரும் ஆதரித்தார்

a. I மற்றும் IV சரி b. II மற்றும் III சரி
c. I, II மற்றும் IV சரி d. II சரி e. விடை தெரியவில்லை

55. ________ was the first Queen to fight against the British colonial power in India
a. Kuyili **b. Velu Nachiar** c. Rani Mangammal
d. Rani Lakshmi Bai e. Answer not known

இந்தியாவில் பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்ட முதல் பெண்ணரசி
a. குயிலி b. வேலு ாநச்சியார் c. ராணி மங்கம்மாள்
d. ராணி இலட்சமி பாய் e. விடை தெரிலயவில்லை

56. Assertion (A): Ambedkar wrote, Annihilation of caste
Reason (R): He criticized cased system and Hindu religious texts
**a. Both A and R are true and R is the correct explanation of A**
B. Both A and R are true but R is not the correct explanation of A
c. A is true, R is false
d. A us false, R is true
e. Answer not known

கூற்று (A): சாதி ஒழிப்பு பற்றி அம்பேத்கர் எழுதியுள்ளார்.
காரணம் (R): இந்து சமய நூல்களில் இருந்த சாதி முறையை விமர்சனம் செய்தார்.
a. கூற்று A மற்றும் காரணம் R இரண்டும் சரி, மற்றும் காரணம் R கூற்றின் A சரியான விளக்கமாகும்.
b. கூற்று A மற்றும் காரணம் R இரண்டும் சரி, ஆனால் காரணம் R கூற்றின் A சரியான விளக்கமல்ல

c. கூற்று A சரி, காரணம் R தவறு
d. கூற்று A தவறு, காரணம் R சரி
e. விடை தெரியவில்லை

57. During the Loksabha Constituency Election in 1952 Kamarajar got elected from
a. Nagercoil b. Virudhu Nagar **c. Sritilliputtur**
d. Aruppukkottai d. Answer not known
1952 - இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் காமராசர் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதி ___________ ஆகும்
a. நாகர்கோவில் b. விருது நகர் c. ஸ்ரீவில்லிப்புத்தூர்
d. அருப்புக்கோட்டை e. விடை தெரியவில்லை

58. Which one of the following is the family name of Nehru?
a. Rai b. Kul c. Sarkar
**d. Kaul** e. Answer not known
பின்வருவனவற்றுள் எது நேருவின் குடும்பப் பெயர் ஆகும்?
a. ராய் b. குல் c. சர்கார்
d. கௌல் e. விடை தெரியவில்லை

59. 'India will be a global player in the digital economy' who said this?
a. Amarthiyasen b. Manmohan Singh **c. Sunder Pitchai**
d. Jawaharlal Nehru e. Answer not known
'இலக்க முறை பொருளாதாரத்தில் இந்தியர் ஓர் உலகளாவிய போட்டியாளராகும்' எனக்கு கூறியவர்
a. அமர்த்தியாசென் b. மன்மோகன் சிங் c. சுந்தர் பிச்சை
d. ஜவஹர்லால் நேரு e. விடை தெரியவில்லை

60. Choose the Right matches among type:
I. First five year plan - 1950 – 1955
II. Third Five year plan - 1966 – 1969
III. Ninth Five year plan - 1997 – 2002
IV. Twelfth five year plan - 2012 – 2017
a. I and II correct **b. III and IV correct**
c. I and III only correct d. II and IV correct c. Answer not known
சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்:
I. முதல் ஐந்தாண்டு திட்டம் - 1950 - 1955
II. மூன்றாவது ஐந்தாண்டு திட்டம் - 1966 – 1969
III. ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டம் - 1997 – 2002
IV. பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்டம் - 2012 – 2017
a. I மற்றும் II சரி b. III மற்றும் IV சரி
c. I மற்றும் III சரி d. II மற்றும் IV சரி
e. விடை தெரியவில்லை

61. Assertion (A): Self help groups are linked with bank based on their performance
Reason (R): The main objective of this programme is to bring the beneficiaries above the poverty line.
a. A is true but R is false
**b. Both A and R are true. R is the correct explanation of A**
c. A is false, and R is true
d. Both A and R are true, but R is not the correct explanation of A
e. Answer not known

கூற்று (A): சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை வைத்து வங்கி இணைப்புத் திட்டத்தல் சேர்க்கப்படுகிறார்கள்.

காரணம் (R): இத்திட்டத்ததின் முக்கிய நோக்கமானது பயனாளிகளை வறுமைக் கோட்டிற்கு மேல் முன்னேற்றமடையச் செய்வதாகும்.

a. A சரி ஆனால் R தவறு

b. A மற்றும் R இரண்டும் சரி என்பது A விற்கான சரியான விளக்கமாகும்

c. A தவறு, மற்றும் R சரி

d. A மற்றும் R இரண்டும் சரி, ஆனால் R என்பது A விற்கான சரியான விளக்கமல்ல

e. விடை தெரியவில்லை

62. The country which will host ASEAN 2022 is

**a. Cambodia** b. Italy c. Rome
d. Sri Lanka e. Answer not known

2022 இல் ASEAN கூட்டத்தை எந்த நாடு நடத்துகிறது?

a. கம்போடியா b. இத்தாலி c. உரோம்
d. இலங்கை e. விடை தெரியவில்லை

63. Who won the Miss Universe 2021?

a. Harnaaz Sandhu b. Nadia Ferreira c. Lara Dutta
d. Nandita Banna e. Answer not known

உலக அழகி பட்டத்தினை 2021-இல் வென்றவர் யார்?

a. ஹர்னாஸ் சந்து b. நாடியா ∴பெரேரியா c. லாரா தத்தா
d. நந்திதா பன்னா e. விடை தெரியவில்லை

64. Match the following:

| Name of the political party | Strength in the 16th Assembly |
|---|---|
| A. PMK | 1. 18 |
| B. VCK | 2. 2 |
| C. CPI (M) | 3. 4 |
| D. INC | 4. 5 |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a | 3 | 2 | 4 | 1 |
| b. | 4 | 2 | 3 | 1 |
| **c.** | **4** | **3** | **2** | **1** |
| d. | 2 | 3 | 4 | 1 |

e. Answer not known

பொருத்துக.

| அரசியல் கட்சி | 16 வது சட்டமன்றத்தில் அதன் பலம் |
|---|---|
| A. பாட்டாளி மக்கள் கட்சி | 1. 18 |
| B. விடுதலை சிறுத்தைகள் கட்சி | 2. 2 |
| C. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி | 3. 4 |
| D. இந்திய தேசிய காங்கிரஸ் | 4. 5 |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a | 3 | 2 | 4 | 1 |
| b. | 4 | 2 | 3 | 1 |
| **c.** | **4** | **3** | **2** | **1** |
| d. | 2 | 3 | 4 | 1 |

e. விடை தெரியவில்லை

65. The objective of Clean Energy Research Initiative (CERI) is to

a. Develop innovations **b. Make it affordable and accessible**

c. Develop research d. All of the above
e. Answer not known
தூய்மை சக்தி ஆராய்ச்சி முயற்சி (CERI) யின் குறிக்கோள்
a. பதுமைகளை வளர்ப்பது b. மலிவாகவும் அணுகக்கூடியதாகவும் பெற்ப்படுவது
c. ஆராய்ச்சியின் மூலம் வளர்ப்பது e. மேற்குறிப்பிட்டுள்ள அனைத்தும்
e. விடை தெரியவில்லை

66. On November 28, 2021, a major earthquake with a magnitude of 7.5 struct at
a. Indonesia **b. Peru** c. Pakisthan
d. New Zealand e. Answer not known
நவம்பர் 28, 2021 அன்று, 7.5 ரிக்டர் அளவு கொண்ட ஒரு மாபெரும் நிலநடுக்கம் ஏற்பட்ட இடம்
a. இந்தோனேஷியா b. பெரு c. பாகிஸ்தான
d. நியூசிலாந்து e. விடை தெரியவில்லை

67. Which one of the following is root parasite plant?
a. Viscum b. Cuscuta c. Loranthus
**d. Rafflesia** e. Answer not know
கீழ்க்கண்டவற்றில் எந்த தாவரம் வேர் ஒட்டுண்ணி தாவரமாகும்?
a. விஸ்கம் b. கஸ்கூட்டா c. லோரான்தஸ்
d. ராப்ளசியா e. விடை தெரியவில்லை

68. Answer the following questions using the data given below:
Assertion (A): Acetic acid is a weak acid.
Reason (R) : Acetic acid has four hydrogen atoms but only one can be replaced.
a. A is correct R is wrong
**b. A and R are correct. R does not explain A**
c. A is wrong R is correct
d. A and R are correct. R explains A
e. Answer not known
பின்வரும் வினாக்களை கீழ்க்கண்ட குறிப்புகள் மூலம் விடையளிக்கவும்:
கூற்று (A): அசிட்டிக் அமிலம் வலிமை குறைந்த அமிலம்
காரணம் (R): அசிட்டிக் அமிலத்தில் நான்கு ஹைட்ரஜன் அணுக்கள் இருந்தாலும், ஒரே ஒரு ஹைட்ரஜனை மட்டுமே இடப்பெயர்ச்சி செய்ய முடியும்.
a. கூற்று A சரி காரணம் R தவறு
b. கூற்றும் A, காரணமும் R சரி, ஆனால் காரணம் R கூற்று A விவரிக்கவில்லை
c. கூற்று A, காரணமும் R சரி. காரணம் R கூற்ளை A நன்கு விளக்குகிறது
e. விடை தெரியவில்லை

69. When a force 'F' acts on a body for a period of time 't', then the product of force and time is known as
a. Inertia b. Moment of a force **c. Impulse**
d. Linear momentum e. Answer not known
'F' என்ற விசை 't' என்ற கால அளவில் ஒரு பொருளின் மீது செயல்பட்டால் ஏற்படும் மதிப்பு. விசை மற்றும் கால அளவின் பெருக்கற்பலனுக்கு சமமாக இருக்கும். இதனை ________ என்பர்.
a. நிலைமம் b. உந்து விசை c. கணத்தாக்கு
d. நேரியல் உந்தம் e. விடை தெரியவில்லை

70. Which of this is not an unit for viscous force?
**a. Newton** b. Poise c. $Kgm^{-1}s^{-1}$

d. $Nsm^{-2}$ e. Answer not known

இவற்றுள் எது பாகுமை விசையின் அலகு கிடையாது?

a. நியூட்டன் b. பாய்ஸ் c. $Kgm^{-1}s^{-1}$

d. $Nsm^{-2}$ e. விடை தெரியவில்லை

71. Which one of the following has the highest density?

a. Air **b. Water** c. Kerosene

d. Wood e. Answer not known

கீழ்காண்பவற்றுள் எந்தப் பொருளின் அடர்த்தி மிகுதியானது?

a. காற்று b. நீர் c. மண்ணெண்ணெய்

d. மரம் e. விடை தெரியவில்லை

72. Find the H.C.F. of $x^2 - 2xy + y^2$ and $x^4 - y^4$.

a. 1 b. $x + y$ **c.** $x - y$

d. $x^2 - y^2$ e. Answer not known

$x^2 - 2xy + y^2$ மற்றும் $x^4 - y^4$ ஆகியவற்றின் மீப்பெரு பொது வகுத்தி காண்க.

a. 1 b. $x + y$ c. $x - y$

d. $x^2 - y^2$ e. விடை தெரியவில்லை

73. Find the area of triangle formed by the points (-5,0), (0, -5) and (5, 0).

a. 0 Sq. units **b. 25 Sq. units** c. 5 Sq. units

d. 125 Sq. units e. Answer not known

(-5, 0), (0, -5) மற்றும் (5, 0) ஆகிய புள்ளிகளால் அமைக்கப்படும் முக்கோணத்தின் பரப்பு காண்க.

a. 0 ச. அலகுகள் b. 25 ச. அலகுகள் c. 5 ச. அலகுகள்

d. 125 ச. அலகுகள் e. விடை தெரியவில்லை

74. The circumference of a circular park is 352 m. Find the area of the park.

a. 8956 $m^2$ b. 448 $m^2$ c. 1452 $m^2$

**d. 9856 $m^2$** e. Answer not known

ஒரு வட்ட வடிவப் பூங்காவின் சுற்றளவு 352 மீ, எனில் பூங்காவின் பரப்பளவு காண்க.

a. 8956 மீ$^2$ b. 448 மீ$^2$ c. 1452 மீ$^2$

d. 9856 மீ$^2$ e· விடை தெரியவில்லை

75. A wood cutter took 12 minutes to make 3 pieces of a block of wood. How much time would needed to make 5 such pieces?

a. 12 min **b. 24 min** c. 30 min

d. 36 min e. Answer not known

ஒரு மரம் வெட்டுபவர்க்கு ஒரு மரத்துண்டை 3 துண்டுகளாக்குவதற்கு 12 நிமிடங்கள் ஆகும் எனில் அதனை 5 துண்டுகளாக்க எவ்வளவு நேரம் தேவை?

a. 12 நிமிடம் b. 24 நிமிடம் c. 30 நிமிடம்

d. 36 நிமிடம் e. விடை தெரியவில்லை

76. The least number which when divided by 12, 16, 24 and 36 leaves a remainder 7 in each case is

a. 151 b. 51 c. 36

d. 144 e. Answer not known

12, 16, 24 மற்றும் 36 ஆல் வகுபடும்போது ஒவ்வொரு முறையும் 7 ஐ மீதியாக தரக்கூடிய மிகச்சிறிய மதிப்புடைய எண் _________ ஆகும்.

a. 151 b. 51 c. 36

d. 144 e. விடை தெரியவில்லை

77. If 382 is written as 238, 473 as 347 and so on, then which of the following two number will have least difference between them

a. 473 and 382 b. 629 and 728 c. 629 and 568

**d. 728 and 847** e. Answer not known

382 என்பது 238 எனவும் 473 என்பது 347, …., எனவும் எழுதப்பட்டால், பின்வரும் இரு எண்களில் எந்த இரு எண்களின் வித்தியாசம், மிகக் குறைவானதாக இருக்கும்.

a. 473, 382 b. 629, 728 c. 629, 568

d. 728, 847 e. விடை தெரியவில்லை

78. If RED is coded as 6720. Then GREEN can be coded as

a. 1677199 **b. 1677209** c. 16717209

d. 9207716 e. Answer not known

RED ன் குறியீடு 6720 எனில் GREEN ன் குறியீடு

a. 1677199 **b. 1677209** c. 16717209

d. 9207716 e. விடை தெரியவில்லை

79. ABCD: OPQR : : WXYZ :?

a. EFGH e. KLMN c. QRST

e. STUV E. Answer not known

ABCD: OPQR : : WXYZ :?

a. EFGH e. KLMN c. QRST

e. STUV e. விடை தெரியவில்லை

80. A number consists of two digit whose sum is 9. If 27 is subtracted from the original number, its digits are interchanged. Find the original number.

a. 36 b. 45 c. 54 d. 63 e. Answer not known

இரண்டு இலக்கங்களைக் கொண்ட ஓர் எண்ணின் இலக்கங்களின் கூடுதல் 9. அந்த எண்ணிலிருந்து 27 ஐக் கழிக்க அவ்வெண்களின் இலக்கங்கள் இடம் மாறிவிடும். எனில், அவ்வெண்ணைக் காண்க

a. 36 b. 45 c. 54 d. 63 e. விடை தெரியவில்லை

81. Simplify: 20 + $[8\times2+\{\overline{6\times3}-10\div5\}]$

a. 40 b. 57 c. 52 d. 48 e. Answer not known

சுருக்குக: 20 + $[8\times2+\{\overline{6\times3}-10\div5\}]$

40 b. 57 c. 52 d. 48 e. விடை தெரியவில்லை

82. The rate of interest at which Rs. 640 amount to Rs. 774.40 in 2 years. Find the interest is compounded annually

a. 10% b. 12% c. 12.5%

d. 14% e. Answer not known

Rs. 640 ஆனது இரண்டு ஆண்டுகளில் கூட்டுத்தொகை Rs. 774.40 ஆகும் எனில் கூட்டு வட்டி விகிதம் காண்

a. 10% b. 12% c. 12.5%

d. 14% e. விடை தெரியவில்லை

83. The value of a motor cycle 2 years ago is Rs. 1,00,000. It depreciates at the rate of 5% p.a. Then the present value is

a. Rs. 80,000 b. Rs. 80,250 **c. Rs. 90, 250**

d. Rs. 90,000 e. Answer not known

ஓர் இரு சக்கர வாகனத்தின் விலை 2 ஆண்டுகளுக்கு முன் ரூ. 1,00,000 ஆக இருந்தது. அதன் மதிப்பு ஆண்டுதோறும் 5% வீதம் குறைகிறது எனில் அதன் தற்போதைய மதிப்பு

a. ரூ. 80,000 b. ரூ. 80,250 c. ரூ. 90,250

d. ரூ. 95,000 e. விடை தெரியவில்லை

84. "Liberty, Equality and Fraternity" are the slogans given importance in the preamble of our constitution. These were slogans of which Revolution?

a. American Revolution **b. French Revolution** c. Russian Revolution

d. Chinese Revolution e. Answer not known

"சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்" என்ற முழுக்கங்கள் இந்திய அரசியலமைப்பின் முகவுரையில் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. இவை எந்த புரட்சியின் முழக்கங்கள்?

a. அமெரிக்கப் புரட்சி b. பிரெஞ்சுப் புரட்சி c. ரஷ்யப் புரட்சி

d. சீனப் புரடசி e. விடை தெரியவில்லை

85. Assertion (A): The council of Ministers is collectively responsible to the Lok Sabha.

Reason (R) : Ministers are appointed by the president on the advice of Prime Minister.

a. A is true but R is false

b. Both A and R are true and R is the correct explanation of A

c. A is false, R is true

**d. Both A and R are true but R is not the correct explanation of A**

e. Answer not known

கூற்று (A): அமைச்சர்கள் குழு ஒட்டு மொத்தமாக மக்களவைக்கு பொறுப்புடையவர்கள்

காரணம் (R) : அமைச்சர்களை பிரதமரின் ஆலோசனையின் பேரில் குடியரசு தலைவர் நியமிக்கிறார்.

a. A சரி ஆனால் R தவறு

b. A மற்றும் R சரி A க்கான சரியான விளக்கம் R ஆகும்

c. A தவறு, R சரி

d. A மற்றும் R சரி A க்கான சரியான விளக்கம் R ஆகாது

e. விடை தெரியவில்லை

86. Which of the following is considered as the Guardian of the constitution?

a. Legislature b. Executive c. Cabinet

**d. Supreme Court** e. Answer not known

பின்வருவனவற்றுள் எது அரசியல் அமைப்பின் பாதுகாவலனாகக் கருதப்படுகின்றது?

a. சட்டமன்றம் b. ஆட்சித்துறை c. அமைச்சரவை

d. உச்ச நீதிமன்றம் e. விடை தெரியவில்லை

87. Arrange the following in chronological order with respect to their establishment:

1. Central vigilance Commission
2. Central Bureau of Investigation
3. Central information commission
4. Lokpal and Lokayuktha Act

a. 1, 3, 2, 4 b. 2, 4, 3, 1 **c. 2, 1, 3, 4**

d. 3, 2, 1, 4 e. Answer not known

கீழ்காண்பவற்றை அதன் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டின் அடிப்படையில் சரியாக கால வரிசைப்படுத்தவும்:

1. மத்திய கண்காணிப்பு ஆணையம்
2. மத்திய புலனாய்வு குழு

3. மத்திய தகவல் ஆணையம்
4. லோக்பால் மற்றும் லோக் ஆயக்தா சட்டம்
a. 1, 3, 2, 4 b. 2, 4, 3, 1 **c. 2, 1, 3, 4**
d. 3, 2, 1, 4 e. விடை தெரியவில்லை

88. Which is the northern most settlement of Indus Valley civilization?
a. Sutkagendor **b. Shortugai** c. Alamgirupur
d. Daimabad e. Answer not Known
சிந்து சமவெளி நாகரீகத்தின் வடக்கோர குடியிருப்பு எது?
a. சுட்காஜென்டோர் b. ஷோர்டுகை c. ஆலம்கிர்பூர்
d. டைமாபாத் e. விடை தெரியவில்லை

89. Who was not the contemporary of Samudragupta?
a. Pushyavarman **b. Bhaskarvarman** c. Vishnugopa
d. Sri Meghavarman e. Answer not known
சமுத்திரகுப்தர் காலத்தைச் சாராதவர்
a. புஷ்யவர்மன் b. பாஸ்கர்வர்மன் c. விஷ்ணுகோபா
d. ஸ்ரீ மேகவர்மன் e. விடை தெரியவில்லை

90. Choose the correct statement:
(i) The Indian heritage advocates hospitality, charity, friendship, love, humility, truth
(ii) The paintings at Ajanta and Ellora are world famous.
(iii) The Jain's celebrate Buddha Poornima.
(iv) Bharathanatiyam, Kuchipudi, kathak, Manipuri and Oddissi are some of the famous dances in India.
a. i and ii are correct b. Only iv is correct c. Only iii is correct
**d. i , ii and iv are correct** e. Answer not known
சரியானக் கூற்றை தேர்வு செய்க:
(i) இந்தியப் பாரம்பரியம் விருந்தோம்பல், ஈகை, நட்பு, அன்பு, ஒழுக்கம், உண்மை, ஆகியவற்றைக் கொண்டது
(ii) அஜந்தா மற்றும் எல்லோரா ஓவியங்கள் உலகப் புகழ் பெற்றவை
(iii) சமணர்கள் புத்த பூர்ணிமாவை கொண்டாடுகின்றனர்
(iv) பரத நாட்டியம், குச்சுப்புடி, கதக்களி, மணிப்புரி, மற்றும் ஒடிசி போன்றவை இந்தியாவின் புகழ் பெற்ற நடனக்கலைகளாகும்
a. i மற்றும் ii சரி b. iv மட்டும் சரி c. iii மட்டும் சரி
d. i, ii மற்றும் iv சரி e. விடை தெரியவில்லை

91. Assertion (A): Himalayas are called young fold mountains.
Reason (R) : It was formed only few million years ago by the folding of the earth crust due to tectonic activity.
a. A is true R is false
b. A is false R is true
**c. Both A and R are true**
d. Both A and R are false
e. Answer not known
கூற்று (A): இமயமலை ஒரு இளம் மடிப்பு மலையாகும்
காரணம் (R): இமயமலை சில மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர்தான் புவிமேலோட்டு பேரியக்க விசைகள் காரணமாக உருவாகியது.
a. A சரி, R தவறு
b. A தவறு, R சரி

c. A, R ஆகிய இரண்டும் சரி
d. A, R ஆகிய இரண்டும் தவறு
e. விடை தெரியவில்லை

92. Ganga River's right bank tributary is

a. Ramganga  b. Manas  C. Kosi
**d. Yamuna**  e. Answer not known

கங்கை நதியின் வலது கரையின் துணை நதி

a. ராம் கங்கா  b. மனாஸ்  c. கோசி
d. யமுனா  e. விடை தெரியவில்லை

93. Match the following rivers with their tributaries:

A. Indus River — 1. Gomti
B. Ganga River — 2. Indravati
C. Brahmaputra River — 3. Chenab
D. Godavari River — 4. Subansiri

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 1 | 2 | 4 |
| b. | 2 | 4 | 3 | 1 |
| **c.** | **2** | **4** | **1** | **3** |
| d. | 4 | 2 | 3 | 1 |

e. Answer not known

கீழ்க்கண்ட ஆறுகளை அவற்றின் துணையாறுகளுடன் பொருத்தவும்:

A. சிந்து நதி — 1. கோமதி
B. கங்கை நதி — 2. இந்திராவதி
C. பிரம்மபுத்திரா நதி — 3. சீனாப்
D. கோதாவரி நதி — 4. சுபன்ஸ்ரீ

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 1 | 2 | 4 |
| b. | 2 | 4 | 3 | 1 |
| **c.** | **2** | **4** | **1** | **3** |
| d. | 4 | 2 | 3 | 1 |

e. விடை தெரியவில்லை

94. Match the following:

| Name of the organization | Place |
|---|---|
| A. Government Medical College | 1. South Chennai |
| B. Centre of excellence for | 2. K.K. Nagar, Chennai |
| C. Centre of excellence at the Institute of Rehabilitation Medicine | 3. Kanchipuram |
| D. Multispeciality hospital | 4. Thiruvallur |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 3 | 4 | 2 |
| b. | 3 | 4 | 2 | 1 |
| **c.** | **4** | **3** | **2** | **1** |
| d. | 3 | 4 | 1 | 2 |

e. Answer not known

கீழ்க்கண்டவற்றைப் பொருத்துக
அமைப்பகளின் பெயர்கள் — அமைவிடம்

A. அரசு மருத்துவக் கல்லூரி — 1. தென் சென்னை
B. புற்றுநோய்க்கான சிறப்பு மையம் அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை — 2. கே.கே. நகர், சென்னை
C. மறுவாழ்வு சிறப்பு மருத்துவ நிறுவன மையம் — 3. காஞ்சிபுரம்
D. பல்நோக்கு சிறப்பு மருத்துவமனை — 4. திருவள்ளூர்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 3 | 4 | 2 |
| b. | 3 | 4 | 2 | 1 |
| **c.** | **4** | **3** | **2** | **1** |
| d. | 3 | 4 | 1 | 2 |

e. விடை தெரியவில்லை

95. The Tamil Nadu Rice Research Institute (TRRI) working under Tamil Nadu Agricultural University is situated in _______ District.
**a. Thanjavur** b. Dindugal c. Salam
d. Thirunelveli e. Answer not known
தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் (TNAU) கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனம் (TRRI) எங்கு உள்ளது?
a. தஞ்சாவூர் b. திண்டுக்கல் c. சேலம்
d. திருநெல்வேலி e. விடை தெரியவில்லை

96. Tamraparni is a perennial river that originates from the _______ of the western Ghats.
**a. Agastyar Koodam Peak of Pothigai hills** b. Siva Gnana teertha
c. Varusanadu hills d. Thenpennai e. Answer not known
தாமிரபரணி என்பது _________ உச்சியில் மேற்கு தொடர்ச்சி மலையில் உருவாகும் ஒரு வற்றாத நதியாகும்.
a. அகஸ்தியர் கூடத்தில் பொதிகை மலை b. சிவஞான தீர்த்தம்
c. வருசநாடு மலைகள் d. தென்பெண்ணை e. விடை தெரியவில்லை

97. Which is considered as the greatest blame on human living by Valluvar?
a. Transient life b. Life without progeny **c. Infamous life**
d. Life without love e. Answer not known
மனித வாழ்க்கைக்குரிய பழியென்று வள்ளுவர் எதனைக் குறிப்பிடுகின்றார்?
a. நிலையற்ற வாழ்வு b. மக்கட்பேறு இல்லாத வாழ்வு c. புகழற்ற வாழ்வு
d. அன்பற்ற வாழ்வு e. விடை தெரியவில்லை

98. What will wipe away the wealth of the ruler?
a. Anger of the wicked b. Incessant Rain c. Gifts given to flatterers
**d. Unbearable tears of the oppressed** e. Answer not known
ஆள்வோரின் செல்வத்தைத் தேய்க்கும் படை எது?
a. கொடியோரை ஒறுத்தல் b. ஒல்லாது வானம் பெயல்
c. புகழ்ந்தாருக்குக் கொடுக்கப்படும் பரிசு d. ஆற்றாது அழுத கண்ணீர்
e. விடை தெரியவில்லை

99. Tamil Nadu transgender Welfare Board comes under which department?
a. Health and Family Welfare Department
b. Adidravidar and Tribal Welfare Department
c. Welfare of Differently abled person Department
**d. Social Welfare and Women Empowerment Department**
e. Answer not known
திருநங்கை நலவாரியம் பின்வருவனவற்றுள் எந்தத் துறையின் கீழ் செயல்படுகிறது?

a. சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை
b. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
c. மாற்றுத்திறனாளிகள் நலத்துறை
d. சமூக நலன் மற்றும் மகளிர் மேம்பாட்டுத்துறை
e. விடை தெரியவில்லை

100. A niggard hand, o' erweening self-regard and mirth unseemly bring disgrace to men of kingly birth. What is he meaning of the word 'kingly birth' mentioned in the above verse?

a. God **b. King** c. Superior
d. Nobles e. Answer not known

"இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு"
இக்குறளில் குறிப்பிடும் 'இறை' என்பதன் பொருள்

a. இறைவன் b. அரசன் c. உயர்ந்தவன்
d. மேன்மக்கள் e. விடை தெரியவில்லை